# Saiva Munnetta Sangam (UK)
# Community Service through Hindu (Saiva) Concern




*SMSUK Today*

SAIVA MUNNETTA SANGAM (UK)
COMMUNITY SERVICE THROUGH HINDU (SAIVA) CONCERN

*SMSUK Today*

# Thoranam

# தோரணம்

*MARCH 2026*

REG.CHARITY
292085


- ஆசிரியர்: திருமதி. சுதர்சினி வாகீசன்
- துணை ஆசிரியர்: திரு. சோதிரட்ணம் நிரஞ்சன்
- தொழில்நுட்ப வடிவமைப்பு: திரு. சோதிரட்ணம் நிரஞ்சன்


*Year 12 Issue 122*

நிரல் 12 தொங்கல் 122

இங்கிலாந்தில் இருந்து வெளியாகும்
மாதாந்த மின் இதழ்

*Monthly E-Magazine published in the UK*

Thoranam

122
தோரணம்

தோரணம் வாசகர்களுக்கு,

# பொறுப்புத் துறப்பு

தோரணம் மாதாந்த மின் இதழ் தமது இதழின் செய்திகளுக்கு மெருகூட்டும் வகையில் பல காணொளிகளையும் புகைப்படங்களையும் இணையங்களில் இருந்து அவ்வப்போது இணைத்து வருகிறது. தோரணத்தில் பிரசுரிக்கப்படும் அவ்வாறான காணொளிகளினதும், புகைப் படங்களினதும் உரிமைகள் அவற்றின் உரிமையாளர்களினது என்பதை அறியத்தருகின்றோம்.

நன்றி

## ஆசிரியர் பக்கம்

அன்பான உறவுகளுக்கு,

'தைப்பூசமாடி உலகம் பொலிவெய்த' என்று சம்பந்தரால் பெருமையுடன் போற்றப்பட்ட தைப்பூசத் திருநாளானது இன்று ஆன்மிக விழாவாக மட்டுமன்றி உலகத் தமிழர்கள் அனைவரையும் இணைக்கும் ஒரு பண்பாட்டு நிகழ்வாக உலகெங்கும் வாழும் அனைத்துத் தமிழர்களாலும் சிறப்பான முறையில் கொண்டாடப் பட்டு வருகின்றது. கடந்த மாதம் எமது சிவகாம சுந்தரி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வரர் ஆலயத்திலும் தைப்பூச விரத வழிபாடு மிகச் சிறப்பாக அனுட்டிக்கப்பட்டது. கூடவே மகா சிவராத்திரி விழாவும் எமது ஆலயத்தில் நான்கு காலப் பூசைகளுடன் மிகவும் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டிருந்தது. அத்துடன் திருவையாறு உற்சவமும் ஆன்மிக நெஞ்சங்களை ஒருமுகப்படுத்திய நிகழ்வாக மிகவும் விமரிசையாக நடந்தேறியிருந்தது. இவை குறித்த தகவல்களை விபரங்களையும் இந்த இதழில் இணைத்துள்ளோம்.

இந்த மாதம் எமது நால்வர் தமிழ்க்கலை நிலையத்தின் கலை விழா நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்விழாவினைச் சிறப்புற நடத்துவதற்குரிய ஆயத்தப் பணிகளை ஆசிரியர்களும் மாணவர்களும் பெற்றோர்களும் இணைந்து தீவீரமாக மேற்கொண்டு வருகின்றனர். இவ்விழா சிறப்புற நடைபெறுவதற்கு உங்கள் அனைவரினதும் பங்களிப்பினையும் தோரணம் இதழ் சார்பில் வேண்டி நிற்கின்றோம். கூடவே வசந்த நவராத்திரி விழாவும் நடைபெற இருக்கின்றது என்பதனையும் அறிவிக்கிறோம்.
தமிழ் மொழியும் பண்பாடும் வளர்ச்சியுற, நம் பயணம் தொடர்கிறது.

தொடர்ந்தும் தோரணம் இதழுடன் இணைந்து பயணிக்குமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

*திருமதி. சுதர்சினி வாகீசன். NDT(SL)*
*ஆசிரியர் - தோரணம்*
*உதவி ஆசிரியர் - கலசம்*
*ஆசிரியர் - நால்வர் தமிழ்க் கலை நிலையம்*
*வெளியீட்டுத்துறைச் செயலாளர்: SMSUK*
*Mobile: 0794 361 6964*

*திரு. சோதிரட்ணம் நிரஞ்சன். BA (Hon)*
*துணை ஆசிரியர் : தோரணம்*
*வெளிநாட்டுத் திட்டச் செயலாளர் :SMSUK*
*Mobile: 0787 640 4354*

# *Sithambareswarar Temple*



**சிதம்பரேஸ்வரர் ஆலயம்**

- எமது ஆலயத்தில் நடைபெறும் தினசரி பூசைகள், விசேட நிகழ்வுகள், விழாக்களை நீங்கள் வீட்டில் இருந்துகொண்டே பார்த்து, தரிசித்து மகிழ பின்வரும் *Zoom* வாயிலாக இணைந்து கொள்ளுங்கள். .
  *Zoom ID: 3453456575 Password: smsuk*
- ஆலய பூஜை தினசரி காலை 9.30 பகல் 12.00 இரவு 7.00 மணி.
- ஆலய தொடர்புகளுக்கு +44208 514 4732 / +447930 825061 (Whatsapp)
- ஆலயத்தில் அரசாங்க கட்டமைப்புகளுக்கேற்ப தினசரி பூசைகள் இடம்பெறும். ஆலய நிகழ்வுகள் பற்றிய விவரங்களை கீழேயுள்ள இணைப்பில் பார்க்கவும்


திரு. அரியரட்ணம் சிறீதரன்
சமய கலாசாரச் செயலாளர்
Mobile: 07846166891

# Saiva Munnetta Sangam (UK)

## Sri Sivahami sametha Sithambareswarar Temple

2 Salisbury Road Manor Park London E12 6AB
Tel : 020 8514 4732 Registered Charity No: 292085
www.saivamunnettasangam.com
email: smsukinfo@gmail.com

**Temple opening times:**

8.30 am— 1.00 pm

5.00 pm—9.00 pm

**Pooja times:**

Morning Pooja at 9.30 am

Afternoon Pooja at 12 noon

Evening Pooja at 7.00 pm

## நால்வர் தமிழ்க் கலை நிலையம்

| | |
|---|---|
| 14/12/25 | பரீட்சை |
| 21/12/25 | பரிசளிப்பு விழா |
| 21/12/25 | தவணை நிறைவு (Last Day) |
| 11/01/26 | தவணை ஆரம்பம் |
| 22/02/26 | இடைத் தவணை விடுமுறை |
| 01/03/26 | நாவன்மை-திருமுறைப் போட்டி |
| **28/03/26** | **கலை விழா 2026** |
| 29/03/26 | தவணை நிறைவு (No School) |
| 19/04/26 | தவணை ஆரம்பம் |
| 31/05/26 | இடைத் தவணை விடுமுறை |
| 05/07/26 | பரீட்சை |
| 19/07/26 | பாடசாலை விடுமுறை (Last Day) |

## கலை வகுப்புகள்

நால்வர் தமிழ்க் கலை நிலையத்தால் நடத்தப் பெறும் கலை வகுப்புகள் விபரம் இங்கே தரப்பட்டுள்ளன. மிருதங்கம், வீணை, வாய்ப்பாட்டு, வயலின், பரதநாட்டியம் ஆகிய கலைகளில் உங்கள் பிள்ளைகளை ஈடுபடுத்த விரும்பும் பெற்றோர் தயவு செய்து எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

### மிருதங்கம்

ஆசிரியர் : குமரன் இரவீந்திரதாஸ் 07921 810 386
mridangam.kraven@gmail.com
ஞாயிற்றுக்கிழமை பகல் 12.15 மணி முதல் பகல் 1.15 மணி வரை
நால்வர் கலை நிலையத்தில்
Little Ilford School, Rectory Road, Manor Park E12 6JB

### பரத நாட்டியம்

ஆசிரியர் : ரஜி யோகராஜ் 07949 763 821
ஆசிரியரின் வீட்டில் நாளும் நேரமும் உங்கள் வசதிக்கு ஏற்ப ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

### வாய்ப்பாட்டும் (சங்கீதம்) வயலினும்

ஆசிரியர் : சுசித்ரகலா கடாட்சம் 07903 889 839 / 020 8864 7009
சனிக்கிழமை காலை 9 மணி முதல் 2 மணி வரை
சங்க மண்டபத்தில் 2 Salisbury Road, Manor Park E12 6AB

### வீணை

ஆசிரியர் : செந்தில்செல்வி வாமனானந்தன் 07886 591 710 / 020 8220 3810
ஆசிரியரின் வீட்டில் - 11 A Cheriton Avenue, Clayhall Ilford IG5 0QN
நாளும் நேரமும் உங்கள் வசதிக்கு ஏற்ப ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

| | | | |
|---|---|---|---|
| 01. 03.2026 | ஞாயிறு | ஆயிலிய நட்சத்திர வழிபாடு | Ayiliya Nakshatra Worship |
| 02. 03.2026 | திங்கள் | நடேசரபிஷேகம் - மாலை | Nadesar abishakam - pm |
| 02. 03.2026 | திங்கள் | மாசி மகம் | Maasi Maham |
| 11. 03.2026 | புதன் | தேய்பிறை அஷ்டமி | Theipirai Ashtami |
| 15. 03.2026 | ஞாயிறு | ஸ்ரீ காயத்திரி ஹோமம் | Sri Gayathri Homam |
| 16. 03.2026 | திங்கள் | பிரதோஷ விரதம் | Prathosham |
| 19. 03.2026 | வியாழன் | வசந்த நவராத்திரி ஆரம். | Vasantha Navaraathri 1st day |
| 27. 03.2026 | வெள்ளி | வசந்த நவராத்திரி பூர்த்தி | Vasantha Navaraathri 9th day |
| 28. 03.2026 | சனி | நால்வர் தமிழ்க் கலை நிலைய கலை விழா | NTA's cultural programme |
| 28. 03.2026 | சனி | ஏகாதசி விரதம் | Ekathasai viratham |
| 28. 03.2026 | சனி | யோகர் சுவாமி குருபூசை | Yogar Swami Guru poosai |
| 30. 03.2026 | திங்கள் | பிரதோஷ விரதம் | Prathosham |
| 01. 04.2026 | புதன் | பங்குனி உத்தரம் | Panguni Utharam |
| 04. 04.2026 | சனி | காரைக்காலம்மையார் குருபூசை | Kaaraikkalammayaar Gurupoosai |
| 09. 04.2026 | வியாழன் | தேய்பிறை அஷ்டமி | Theipirai Ashtami |
| 14. 04.2026 | செவ்வாய் | பிரதோஷ விரதம் | Prathosham |
| 14. 04.2026 | செவ்வாய் | பராபவ வருசப் பிறப்பு | Thamil New year day |
| 19. 04.2026 | ஞாயிறு | ஸ்ரீ காயத்திரி ஹோமம் | Sri Gayathri Homam |
| 25. 04.2026 | சனி | ஆயிலிய நட்சத்திர வழிபாடு | Ayiliya Nakshatra Worship |
| 27. 04.2026 | திங்கள் | ஏகாதசி விரதம் | Ekathasai viratham |
| 28. 04.2026 | செவ்வாய் | பிரதோஷ விரதம் | Prathosham |
| 01. 05.2026 | வெள்ளி | சித்திரைப் பௌர்ணமி | Chithra Powrnami |
| 09. 05.2026 | சனி | தேய்பிறை அஷ்டமி | Theipirai Ashtami |
| 09. 05.2026 | சனி | நடேசரபிஷேகம் - மாலை | Nadesar abishakam - pm |
| 11. 05.2026 | திங்கள் | திருநாவுக்கரசர் குருபூசை | Naavukkrasar Guru poosai |
| 14. 05.2026 | வியாழன் | பிரதோஷ விரதம் | Prathosham |
| 17. 05.2026 | ஞாயிறு | ஸ்ரீ காயத்திரி ஹோமம் | Sri Gayathri Homam |
| 21. 05.2026 | வியாழன் | சேக்கிழார் குருபூசை | Sekilaar Guru poosai |
| 22. 05.2026 | வெள்ளி | ஆயிலிய நட்சத்திர வழிபாடு | Ayiliya Nakshatra Worship |
| 26. 05.2026 | செவ்வாய் | ஏகாதசி விரதம் | Ekathasai viratham |
| 28. 05.2026 | வியாழன் | பிரதோஷ விரதம் | Prathosham |
| 29. 05.2026 | வெள்ளி | வைகாசி விசாகம் | Vaikaasi Visaaham |
| 30. 05.2026 | சனி | **மாலை மாருதம்** 2026 | Elderly Centre entertainment |
| 02. 06.2026 | செவ்வாய் | சம்பந்தர் குருபூசை | Sambanthar Gurupoosai |

| | | | |
|---|---|---|---|
| 08. 06.2026 | திங்கள் | தேய்பிறை அஷ்டமி | Theipirai Ashtami |
| 12. 06.2026 | வெள்ளி | பிரதோஷ விரதம் | Prathosham |
| 12. 06.2026 | வெள்ளி | கணபதி ஹோமம் | Ganapathy Homam |
| 13. 06.2026 | சனி | கொடியேற்றம் | Hoisting of the Flag |
| 16. 06.2026 | செவ்வாய் | தங்கம்மா அப்பாக்குட்டி நினைவு நாள் | Thangamma Appakutty rememberance day |
| 18. 06.2026 | வியாழன் | ஆயிலிய நட்சத்திர வழிபாடு | Ayiliya Nakshatra Worship |
| 19. 06.2026 | வெள்ளி | மாணிக்கவாசகர் குருபூசை | Maanikka-vaasagar Gurupoosai |
| 21. 06.2026 | ஞாயிறு | **தேர் திருவிழா** | Chariot Festival |
| 22. 06.2026 | திங்கள் | ஆனி உத்தர நடேசரபிஷேகம் - காலை | Nadesar abishakam—am |
| 23. 06.2026 | செவ்வாய் | பூங்காவனத்திருவிழா | Poongaavanam |
| 24. 06.2026 | புதன் | வைரவர் மடை | Bairavar Madai |
| 25. 06.2026 | வியாழன் | ஏகாதசி விரதம் | Ekathasai viratham |
| 26. 06.2026 | வெள்ளி | பிரதோஷ விரதம் | Prathosham |
| 07. 07.2026 | செவ்வாய் | தேய்பிறை அஷ்டமி | Theipirai Ashtami |
| 11. 07. 2026 | சனி | சனிப்பிரதோஷ விரதம் | Sani Prathosham |
| 16. 07.2026 | வியாழன் | ஆயிலிய நட்சத்திர வழிபாடு | Ayiliya Nakshatra Worship |
| 16. 07.2026 | வியாழன் | ஆடிப் பிறப்பு | Aadip perapu |
| 19. 07.2026 | ஞாயிறு | ஸ்ரீ காயத்திரி ஹோமம் | Sri Gayathri Homam |
| 22. 07.2026 | புதன் | சுந்தரர் குருபூசை | Suntharar Guru poosai |
| 25. 07.2026 | சனி | ஏகாதசி விரதம் | Ekathasai viratham |
| 26. 07.2026 | ஞாயிறு | பிரதோஷ விரதம் | Prathosham |
| 04. 08.2026 | செவ்வாய் | தேய்பிறை அஷ்டமி | Theipirai Ashtami |
| 10. 08.2026 | திங்கள் | பிரதோஷ விரதம் | Prathosham |
| 12. 08.2026 | புதன் | ஆயிலிய நட்சத்திர வழிபாடு | Ayiliya Nakshatra Worship |
| 13. 08.2026 | வியாழன் | ஆடி அமாவாசை | Aadi amaavasai |
| 14. 08.2026 | வெள்ளி | ஆடிப்பூரம் | Aadippooram |
| 16. 08.2026 | ஞாயிறு | ஸ்ரீ காயத்திரி ஹோமம் | Sri Gayathri Homam |
| 21. 08.2026 | வெள்ளி | வரலட்சுமி விரதம் | Thiruvillakup poosai |
| 22. 08.2026 | சனி | சங்க 49வது ஆண்டு நிறைவு விழா | SMS' 49th Anniversary Celebration |
| 23. 08.2026 | ஞாயிறு | ஏகாதசி விரதம் | Ekathasai viratham |
| 25. 08.2026 | செவ்வாய் | பிரதோஷ விரதம் | Prathosham |
| 26. 08.2026 | புதன் | நடேசரபிஷேகம் - மாலை | Nadesar abishakam - pm |


| | | | |
|---|---|---|---|
| 04. 09.2026 | வெள்ளி | தேய்பிறை அஷ்டமி | Theipirai Ashtami |
| 08. 09.2026 | செவ்வாய் | ஆயிலிய நட்சத்திர வழிபாடு | Ayiliya Nakshatra Worship |
| 08. 09.2026 | செவ்வாய் | பிரதோஷ விரதம் | Prathosham |
| 19. 09.2026 | சனி | புரட்டாதி முதல் சனி | 1st Sani of Purataathi |
| 20. 09.2026 | ஞாயிறு | ஸ்ரீ காயத்திரி ஹோமம் | Sri Gayathri Homam |
| 22. 09.2026 | செவ்வாய் | ஏகாதசி விரதம் | Ekathasai viratham |
| 23. 09.2026 | புதன் | பிரதோஷ விரதம் | Prathosham |
| 25. 09.2026 | வெள்ளி | நடேசரபிஷேகம் - மாலை | Nadesar abishakam - pm |
| 26. 09.2026 | சனி | புரட்டாதி இரண்டாம் சனி | 2nd Sani of Purataathi |
| 27. 09.2026 | ஞாயிறு | மஹாளய பட்சாரம்பம் | Start of Mahalaya Pathcha |
| 03. 10.2026 | சனி | புரட்டாதி மூன்றாம் சனி | 3rd Sani of Purataathi |
| 03. 10.2026 | சனி | தேய்பிறை அஷ்டமி | Theipirai Ashtami |
| 06. 10.2026 | செவ்வாய் | ஆயிலிய நட்சத்திர வழிபாடு | Ayiliya Nakshatra Worship |
| 07. 10.2026 | புதன் | பிரதோஷ விரதம் | Prathosham |
| 10. 10.2026 | சனி | புரட்டாதி கடைசிச்சனி | Last Sani of Purataathi |
| 10. 10.2026 | சனி | மஹாளய அமாவாசை விரதம் | |
| 11. 10. 2026 | ஞாயிறு | நவராத்திரி விரதாரம்பம் | Navarathiri 1st day |
| 18. 10.2026 | ஞாயிறு | ஸ்ரீ காயத்திரி ஹோமம் | Sri Gayathri Homam |
| 19. 10.2026 | திங்கள் | சரஸ்வதி பூசை | Saraswathy Poosai |
| 20. 10.2026 | செவ்வாய் | விஜயதசமி | Vijayathasami |
| 20. 10.2026 | செவ்வாய் | கேதாரகௌரி விரதாரம்பம் | Gowri Viratham 1st Day |
| 22. 10.2026 | வியாழன் | ஏகாதசி விரதம் | Ekathasai viratham |
| 23. 10.2026 | வெள்ளி | பிரதோஷ விரதம் | Prathosham |
| 31. 10.2026 | சனி | **ராக சங்கமம்** 2026 | Raga Sangamam 2026 |
| 01. 11. 2026 | ஞாயிறு | தேய்பிறை அஷ்டமி | Theipirai Ashtami |
| 02. 11.2026 | திங்கள் | ஆயிலிய நட்சத்திர வழிபாடு | Ayiliya Nakshatra Worship |
| 06. 11.2026 | வெள்ளி | பிரதோஷ விரதம் | Prathosham |
| 08. 11.2026 | ஞாயிறு | கேதாரகௌரி விரத பூர்த்தி | Kethaaragowri Viratha End |
| 08. 11.2026 | ஞாயிறு | தீபாவளி | Deepavali |
| 09. 11.2026 | திங்கள் | கந்த சஷ்டி விரதாரம்பம் | Skanthashasti Viratham |
| 14. 11.2026 | சனி | சூரசம்ஹாரம் | Soorasamharam |
| 15. 11.2026 | ஞாயிறு | திருக்கல்யாணம் | Thirukalyaanam |
| 15. 11. 2026 | ஞாயிறு | ஸ்ரீ காயத்திரி ஹோமம் | Sri Gayathri Homam |
| 20. 11.2026 | வெள்ளி | ஏகாதசி விரதம் | Ekathasai viratham |
| 22. 11.2026 | ஞாயிறு | பிரதோஷ விரதம் | Prathosham |
| 24. 11.2026 | செவ்வாய் | திருக்கார்த்திகை விரதம் | Thirukkarthigai Viratham |


# பிரதோஷம்



பிரதோஷ விரதம் என்பது ஒவ்வொரு மாதமும் வளர்பிறை மற்றும் தேய்பிறை திரயோதசி திதிகளில் மாலை நேரத்தில் சிவபெருமானை நினைத்து வழிபடும் ஒரு சிறப்பான விரதமாகும். சிவபெருமானின் விரதங்களில் முக்கிய விரதங்களில் ஒன்றாக்க கருதப்படும் பிரதோஷ விரதமானது எமது ஆலயத்திலும் ஒவ்வொரு மாதமும் சிறப்பு பூசைகளுடன் நடைபெற்று வருகின்றது. பிரதோஷ விரதம் அநுட்டிக்கும் அடியவர்கள், பிரதோஷ நாள்களில் ஆலயத்திற்கு வந்து, பூசைகளில் கலந்து எம்பெருமான் அருள் பெற்றுச் செல்லுமாறு வேண்டுகிறோம்.









# காயத்திரி ஹோமம்

எமது ஆலயத்தில் ஒவ்வொரு மாதமும் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமையில் காலை 10 மணிக்கு காயத்திரி ஹோமமும் அபிஷேகமும் குங்கும அர்ச்சனையும் நடைபெற்று வருகின்றது. இப் பூஜையில் விரும்புகின்ற அடியவர்கள் அனைவரும் பங்கு பற்றலாம். இதற்கான கட்டணமாக £10 மட்டுமே அறவிடப்படுகின்றது. இதில் தோரணம் வாசகர்களாகிய நீங்களும் கலந்து கொண்டு அம்பாள் அருள் பெற வேண்டுகின்றோம்.








# தைப்பூசம்

முருகனுக்குரிய விரதங்களில் சிறப்பு மிகுந்ததாகப் போற்றப்படும் தைப்பூச விரத வழிபாடு *01.02.2026* ஞாயிற்றுக்கிழமை அன்று, விசேட அபிசேக ஆராதனைகளுடன்  மிகவும் சிறப்பாக நடைபெற்றது. தைப்பூச விழாவானது இன்று ஆன்மிக விழாவாக மட்டுமன்றி உலகத் தமிழர்கள் அனைவரையும் இணைக்கும் விழாவாக உலகெங்கும் வாழும் தமிழர்களால் சிறப்பான முறையில் அநுட்டிக்கப்பட்டு வருகின்றது. 'தைப்பூசமாடி உலகம் பொலிவெய்த' என்று சம்பந்தரால் பெருமையுடன் போற்றப்பட்ட இவ்விழாவானது கடந்த மாதம் எமது சிதம்பரேஸ்வரர் ஆலயத்திலும் மிகச் சிறப்பாக அனுட்டிக்கப்பட்டது. இந்நிகழ்வில் அடியார்கள் பலர்கலந்து முருகப்பெருமானின் அருள் பெற்றுச் சென்றனர்.











மகா சிவராத்திரி என்பது மாசி மாத தேய்பிறை சதுர்த்தசி திதியில் சிவபெருமானை வழிபடும் மிக முக்கிய நிகழ்வாகும். ஆன்மிக ரீதியாக மட்டுமின்றி அறிவியல் ரீதியாகவும் பல பேராற்றல்கள் உள்ளதாக சொல்லப்படுகின்ற மகா சிவராத்திரி விரத விழாவானது எமது ஆலயத்திலும் *15.02.2026* ஞாயிற்றுக்கிழமை அன்று பெருவிழாவாக அநுட்டிக்கப்பட்டது. அன்றைய தினம் எமது ஆலயத்தில் நான்கு காலப் பூசைகளும் மிக சிறப்பாக நடைபெற்றிருந்தது. இவ்விழ்ழ்விற்கு வழமையை விட மிக அதிகமான பக்தர்கள் கலந்து கொண்டு சிறப்பித்து எம்பெருமான் அருள் பெற்றுச் சென்றனர்


















# தியாகராஜ உற்சவம்



## *ஸ்ரீ தியாகராஜர் உற்சவம் – 2026*

அருள்மிகு சிவகாமசுந்தரி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வரர் சந்நிதியில், சைவ முன்னேற்றச் சங்கத்தின் ஏற்பாட்டில் 22.02.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று சத்குரு ஸ்ரீ தியாகராஜர் ஆராதனை விழா பக்தி பூர்வமாகவும் விமரிசையாகவும் நடைபெற்றது.

பிரித்தானியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து திரண்ட இசைக் கலைஞர்கள் புடைசூழ, தெய்வீக இராகங்களின் சங்கமத்தில் கர்நாடக இசை உலகின் முன்னணிப்பாடகி விதுஷி நித்யஸ்ரீ மகாதேவன் பங்கு பற்றலுடன் உற்சவம் சிறப்பாக நடைபெற்றது.

விழா தொடக்கமாக, சைவ முன்னேற்றச் சங்கத்தின் தலைவர் திரு. மாணிக்கம் இந்துசேகரன் அவர்களின் வரவேற்புரை இடம்பெற்றது. தொடர்ந்து வித்துவான் தணிகைவேல் குழுவினரின் நாதஸ்வர–தவில் இசை, ஆலய வளாகத்தை இசை வெள்ளத்தில் மூழ்கடித்தது. ஆலய பிரதம சிவாசாரியார் சிவஸ்ரீ ரமேஷ் குருக்கள் அவர்களின் ஆசியுரை நிகழ்விற்கு தெய்வீக மகிமையைச் சேர்த்தது.

பக்தர்கள், பார்வையாளர்கள், ஆதரவாளர்கள், இரசிகர்கள் என மக்கள் வெள்ளம் நிரம்பியிருந்த கோயில் வளாகம் விழாவின் சிறப்பை எடுத்துரைத்தது. முதற்கட்டமாக, பிரித்தானியாவின் முன்னணி நடன ஆசிரியர்களின் மாணவ மாணவிகள் தங்களது கலை அர்ப்பணிப்பை வெளிப்படுத்தினர்.

சைவ முன்னேற்றச் சங்க நால்வர் தமிழ்க் கலை நிலையத்தின் நடன ஆசிரியை பரத சூடாமணி திருமதி ரஜி மோகன்ராஜ் அவர்களின் மாணவியின் வரவேற்பு நடனத்துடன் உற்சவம் இனிதே தொடங்கியது. தொடர்ந்து ஸ்ரீமதி பத்மினி குணசீலன், ஸ்ரீமதி சியாமா மயூரன், ஸ்ரீமதி ராகினி ராஜகோபால், ஸ்ரீமதி ரகுப்பிரியா செந்தில்குமரன், ஸ்ரீமதி தர்சினி ஹரிச்சந்திரன், ஸ்ரீமதி அபர்ணா சாம்பசிவம் ஆகியோரின் மாணவ மாணவிகள் மேடை ஏறி, நடன நிகழ்வுகளை வழங்கினர். கலை மற்றும் பக்தி ஒன்றிணைந்த அந்த்த தருணங்கள் கண்களுக்கு விருந்தாக அமைந்தன.

நடன நிகழ்ச்சிகளுக்குப் பின்னர், சைவ முன்னேற்றச் சங்கத்தின் தலைவர் மற்றும் காப்பாளர் திரு. மாணிக்கம் இந்துசேகரன் அவர்கள், விதுஷி டாக்டர் நித்யஸ்ரீ மகாதேவன் அவர்களை மரியாதையுடன் கௌரவித்து வரவேற்றார்.

அதனைத் தொடர்ந்து பஞ்சரத்ன கீர்த்தனை ஆராதனை ஆரம்பமானது. பிரித்தானியாவின் முன்னணி இசைக் கலைஞர்கள, விதுஷி *Dr* நித்யஸ்ரீ மகாதேவன் அவர்களுடன் இணைந்து  தியாகராஜரின் பஞ்சரத்ன கீர்த்தனைகளைப் பக்தி உணர்வுடன் முன்னெடுத்துச் சென்றனர். சிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் இரண்டாவது தடவையாக இடம்பெற்ற இந்த பஞ்சரத்ன கீர்த்தனை ஆராதனை, சங்கீத இரசிகர்களுக்கும் பக்தர்களுக்கும் பேரானந்தத்தை அளித்தது. கோயில் வளாகம் முழுவதும் இசை அலையில் மிதந்த அந்த தருணம், ஆன்மிக அனுபவமாக பலரது உள்ளங்களில் பதிந்தது.

பிரித்தானியாவின் பல பாகங்களிலிருந்தும் இசைக்கலைஞர்களும், இசைப்பிரியர்களும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது

இறுதியாக, சைவ முன்னேற்றச் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. தர்ம ரபீந்திரமோகன் அவர்களின் மனமார்ந்த நன்றி உரையுடன், சத்குரு ஸ்ரீ தியாகராஜர் ஆராதனை 2026 இனிதே நிறைவு பெற்றது.

இவ்விழா, பக்தியும் கலையும் இணைந்து தலைமுறைகளை இணைக்கும் ஆன்மிகச் சங்கமமாக ஆலய வரலாற்றில் நினைவாகப் பதிந்துள்ளது.



























# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

சைவ சமயக்கருத்தினூடாக சமூக சேவை

## Saiva Munnetta Sangam (UK)

*Community Service Through Saiva (Hindu )Concern*


**2 Salisbury Road, Manor Park, London E12 6AB.**

Charity No. 292085    Tel : 020 8514 4732


முழுதும் உண்மை

எப்பவோ முடிந்த காரியம்



ஒரு பொல்லாப்புமில்லை

யாம் அறியோம்

உ

சிவமயம்

சிவனடிக் கன்புசெய் தேகம் பொன்மயம்
சிவனடிக் கன்புசெய் தேகஞ் சின்மயம்
சிவனடிக் கன்புசெய் தேகம் நன்வயம்
சிவனடிக் கன்புசெய் தேகஞ் சிவமயம்

~ நற்சிந்தனை

ஓம் சற்குரு சிவயோக சுவாமிகள் திருவடிகள் போற்றி ஓம்

## மாதாந்த ஆயிலிய நட்சத்திர தின நற்சிந்தனைப் பாராயணம்
## கூட்டு வழிபாடு

**இடம் :** நால்வர் மணிமண்டபம், சைவ முன்னேற்றச் சங்கம் (UK)
2 Salisbury Road, Manor Park, London E12 6AB

| Zoom ID : 396 148 0588 | Pass code : Shiv |
|---|---|

**காலம் :** நிகழும் விசுவாவசு ஆண்டு மாசி மாதம் 17ம் நாள்
**01-03-2026** ஞாயிற்றுக்கிழமை
காலை 11.00 மணியிலிருந்து 01.00 மணி வரை.

**நிகழ்வுகள் :** நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளரால் வரவேற்புரை
தூப ஆராதனையுடன் தேவாரம் - புராணம் ஓதல்
நற்சிந்தனைப் பாராயணம்
தியானம் - மௌனம் - சும்மா இருத்தல்

**சிறப்புரை :** திருமதி சாவித்திரி அத்துவிதானந்தன் அவர்கள்
சபையோர் நேரம்
அறிவித்தல்கள்
மங்களப் பாடலுடன் தீபாராதனை

**இந்தக் கூட்டுவழிபாட்டில் அனைவரையும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

திரு V.C. வாமனானந்தன்    திருமதி சறோஜா கனகசபேசன்
நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள்

தர்ம இரவீந்திரமோகன்
கௌரவ பொதுச் செயலாளர்

அரியரத்தினம் சிறீதரன்
சமய கலாசாரச் செயலாளர்

எதிர்வரும் சிறப்பு நிகழ்வு : யோகர் சுவாமிகள் குருபூசை **28-03-2026** சனிக்கிழமை

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

**Saiva Munnetta Sangam (UK)**
"Community Service Through Saiva (Hindu)Concern"
2 Salisbury Road, Manor Park, London E12 6AB
Tel : 020 8514 4732 www.saivamunnettasangam.com E.mail: smsukinfo@gmail.com
Registered Charity No: 292085

## அருள்மிகு சிவகாமசுந்தரி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வரர் ஆலயம்



# நடேசர் அபிஷேகத் திருநாள்

## மாசி சதுர்த்தசித் திதி—02.03.2026

பூவினில் வாசம் புனலிற்பொற்பு
புதுவிரைச் சாந்தினின் நாற்றத்தோடு
நாவினிற் பாடநள் ளாறுடைய
நம்பெரு மானிது வென்கொல்சொல்லாய்
தேவர்கள் தானவர் சித்தர்விச்சா
தார்கணத் தாதாடுஞ் சிறந்துபொங்கி
ஆவினில் ஐந்துகந் தாட்டுங்கூடல்
ஆலவா யின்கண் அமர்ந்தவாறே - சம்பந்தர் திருமுறை

**இடம் :** அருள்மிகு சிதம்பரேஸ்வரர் ஆலயம்
**2 Salisbury Road, Manor Park E12 6AB**

**காலம் :** நிகழும் விசுவாவசு ஆண்டு மாசி மாதம் 18ஆம் நாள்
**திங்கட்கிழமை 02.03.2026 மாலை 5.00 மணி முதல்**

அன்புடையீர்

எமது ஆலயத்தில் வெகு சிறப்பாக இடம்பெறும் நடராஜப் பெருமானின் ஆறு அபிஷேகங்களுள் ஒன்றாகிய மாசி மாத சதுர்த்தசித் திதியில் நடைபெறும் அபிஷேகத் திருவிழா இவ்வாண்டும் சிறப்பாக இடம்பெறத் திருவருள் கைகூடியுள்ளது.

இவ்வழிபாட்டில் கலந்து சிறப்பிக்குமாறு உங்களைப் பணிவுடன் அழைக்கின்றோம்.

| | |
|---|---|
| 5.00 மணி | ஹோமம் |
| 6.00 மணி | ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வரப் பெருமானுக்கு அபிஷேகம் |
| 6.30 மணி | கூட்டு வழிபாடு |
| 7.00 மணி | சிறப்பு அலங்காரமும் பூசையும் |
| 8.30 மணி | அர்ச்சனையும் பிரசாதமும் |

**திருவிழா உபயம் : திருமதி மகேஸ்வரி சிதம்பரப்பிள்ளை குடும்பத்தினர்**

எதிர்வரும் சிறப்பு நிகழ்வு : **19.03.2026** வியாழக்கிழமை வசந்த நவராத்திரி ஆரம்பம்

அரியரத்தினம் சிறீதரன்
*சமய கலாசாரச் செயலாளர்*

தர்ம ரவீந்திரமோகன்
*கௌரவ பொதுச் செயலாளர்*

# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

**Saiva Munnetta Sangam (UK)**
"Community Service through Hindu Concern"
2 Salisbury Road, Manor Park, London E12 6AB. Tel: 020 8514 4732 Registered Charity No: 292085



## அருள்மிகு சிவகாமசுந்தரி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வரர் ஆலயம்

## வசந்த நவராத்திரி உற்சவம்

19-03-2026 வியாழக்கிழமை முதல் 28-03-2026 சனிக்கிழமை வரை

## அம்மன் அலங்காரத் தரிசனம்



கண்ணியது உன்புகழ் கற்பது உன்நாமம் கசிந்துபக்தி
பண்ணியது உன்இரு பாதாம்புயத்தில் பகல்இரவா
நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து நான் முன்செய்த
புண்ணியம்ஏது என்அம்மே புவி ஏழையும் பூத்தவளே.

### நிகழ்ச்சி நிகழ்வுகள்

மாலை 5.00 மணி ஹோமம், அபிஷேகம்
மாலை 7.00 மணி நித்ய பூஜை, வசந்த மண்டப பூஜை, அம்பாள் புறப்பாடு மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்

| திகதி | கிழமை | அலங்காரம் | உபய குடும்பம் |
|---|---|---|---|
| 19.03.2026 | வியாழக்கிழமை | சூரிய பிரபை | திரு. திருமதி. ஜெயகரன் |
| 20.03.2026 | வெள்ளிக்கிழமை | சந்திர பிரபை | திரு. திருமதி. சசிகுமார் |
| 21.03.2026 | சனிக்கிழமை | ஓம்காரம் | திரு. திருமதி. துரைராஜா |
| 22.03.2026 | ஞாயிற்றுக்கிழமை | சாகம்பரி | திரு. திருமதி. பத்மகமலன் |
| 23.03.2026 | திங்கட்கிழமை | ரிஷபவாகனம் | திரு. திருமதி. இராஜேஸ்வரன் |
| 24.03.2026 | செவ்வாய்க்கிழமை | அன்னவாகனம் | செல்வி கௌரி மாணிக்கவாசகர் |
| 25.03.2026 | புதன்கிழமை | வளையல் | திரு. திருமதி. சர்வானந்தன் |
| 26.03.2026 | வியாழக்கிழமை | சந்திர இரதோற்சவம் (தேர்த் திருவிழா) | பொது உபயம் |
| 27.03.2026 | வெள்ளிக்கிழமை | பூங்காவனம் | திருமதி சாந்தா அன்னபூரணி<br>திருமதி சரஸ்வதி முருகேசு |

நமது ஆலயத்தில் அருள்பாலிக்கும் ஸ்ரீகமலாம்பிகை, ஸ்ரீகஜவல்லி, ஸ்ரீமகாவல்லி, ஸ்ரீதுர்க்கை, ஸ்ரீதேவி, ஸ்ரீபூமாதேவி ஆகிய சாக்த மூர்த்தங்களின் அனுக்கிரம் வேண்டி பல்வேறு அலங்காரக் காட்சிகளுடன் வசந்த நவராத்திரிப் பெருவிழா நடைபெறவுள்ளது. அடியார்கள் வந்து வணங்கி அன்னை பராசக்தியின் அருள் பெற்று வளமுடன் வாழ அழைக்கின்றோம்.

எதிர்வரும் சிறப்பு நிகழ்வுகள் : 28.03.2026 சனிக்கிழமை யோகர் சுவாமி குருபூசை
04.04.2026 சனிக்கிழமை காரைக்காலம்மையார் குருபூசை

அரியரத்தினம் சிறிதரன்
சமய கலாசாரச் செயலாளர்

தர்ம ரவீந்திரமோகன்
கௌரவ பொதுச் செயலாளர்


சைவ முன்னேற்றச் சங்கம் UK
வழங்கும்
இளம் மயில்களின்
ஆடும் சிதம்பரம்
அபிநயச்சாரல்
2026
வருடத்தின் மாபெரும்
நாட்டிய நிகழ்ச்சி
Saturday
02.05.2026
Woodbridge High School
St Barnabas Road,
Woodford Green,
Essex, IG8 7DQ.
From 4.30pm

# Naalvar Tamil Academy

**நால்வர் தமிழ்க் கலை நிலையம்**

**நால்வர் தமிழ்க்கலை நிலைய தமிழ் வகுப்புகள்**
***Little Ilford School* பாடசாலையில் நடை பெறுகிறது.**

**எமது பாடசாலை கிறிஸ்துமஸ் விடுமுறை நிறைவடைந்து மீண்டும் *11.01.2026* ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கும் என்பதை அறிவிக்கிறோம்.**

**மேலதிக விவரங்களை அறிய கீழ் உள்ள இணைப்பைப் பார்க்கவும்.**




திருமதி நவராணி சுரேந்திரன்

பாடசாலைத் துணைச் செயலாளர்

திருமதி காந்திமதி சூரியகுமார்

பாடசாலைச் செயலாளர்

Mobile: 07484326281

அரும்பு முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு மையம் *14.01.2026* சனிக்கிழமை அன்று உயர்வாசற்குன்று முருகன் ஆலயத்தில் ஒரு கலை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தனர். அந்த நிகழ்ச்சியில், நால்வர் தமிழ்க்கலை நிலைய சங்கீத ஆசிரியர் இசைக்கலைமாமணி ஸ்ரீமதி சுகிர்தகலா கடாட்சம் அவர்களின் மாணவர்கள் அனைவரும் பாராட்டும் வண்ணம் இசைப்பாடல்களைப் பாடிச் சிறப்பித்தனர். மாணவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியருக்கும், பாடல்களைப் பாடிய மாணவர்களுக்கும் தோரணம் இதழ் சார்பில் வாழ்த்துக்கள்




அரும்பு



எமது சங்கீத ஆசிரியர் இசைக்கலைமாமணி ஸ்ரீமதி சுகிர்தகலா கடாட்சம் அவர்களின் மாணவர்கள் பலர் *21.02.2025* சனிக்கிழமை அன்று நடைபெற்ற *OFAAL* பட்டமளிப்பு விழாவில் சங்கீத கலாஜோதி, வயலின் கலாஜோதி பட்டம் பெற்றனர். அவர்களில் எமது நால்வர் தமிழ்க்கலை நிலைய மாணவர்கள் இருவரும் சங்கீத கலாஜோதி பட்டம் பெற்றனர். அவர்கள்,செல்வி லதாங்கி மனோகரன் செல்வன் சேயோன் வாகீசன். மாணவர்களைப் பயிற்றுவித்து அவர்களின் கற்கை நிறைவடையும் வரை உறுதுணையாக இருந்த ஆசிரியருக்கும் தொடர்ந்து கற்று நிறைவு செய்த மாணவர்களுக்கும் தோரணம் இதழ் சார்பில் பாராட்டுக்கள்.









# நாட்டார் கதம்பம்

*First Audio*, சுடர்கலைப்பள்ளி இணைவுடன் நடாத்தப்பட்ட “நாட்டார் கதம்பம்” நிகழ்வு, *28.02.2026* சனிக்கிழமை *Wood bridge high school* மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இயல், இசை, நாடகம் என்னும் ஒழுங்கில் இரண்டு பிரிவுகளாக மதியம் ஒரு மணி தொடக்கம் இரவு *10* மணிவரை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் எமது நால்வர் தமிழ்க்கலை நிலையத்தைச் சேர்ந்த தமிழ்கற்கும் மாணவர்கள் “பழமொழி பழகுவோம்” என்ற தலைப்பில் ஒரு நிகழ்வை வழங்கி பார்வையாளர் அனைவரினதும் பாராட்டைப்பெற்றனர். எமது நால்வர் தமிழ்க்கலை நிலைய வீணை ஆசிரியர் திருமதி செந்தில்செல்வி வாமனானந்தன் அவர்களின் மாணவ மாணவிகள் வீணை இசையை வழங்கிச் சிறப்பித்தனர். இந்நிகழ்வில் பங்குபற்றிய மாணவர்களுக்கும், பயிற்றி மேடையேற்றியஆசிரியர்களுக்கும் தோரணம் இதழ் சார்பில் வாழ்த்துக்கள்.







# கலை விழா

**28.03.2026**

சைவ முன்னேற்றச் சங்கம் (UK)
நால்வர் தமிழ்க் கலை நிலைய
மாணவர்கள் வழங்கும் கலை விழா

அன்புள்ள பெற்றோர்,
முன்னாள் மாணவர்கள்,
சங்க அன்பர்கள் மற்றும்
ஆதரவாளர்கள்
அனைவருக்கும் வணக்கம்.

வெறிச்சோடிக்கிடந்த காலத்தே
வெளிச்சமாய்த்தோன்றி
ஒளிபரப்பிக்கொண்டிருக்கிறது
நமது சங்கம்.
ஒரு பூச்சரத்தின் அடுத்ததடுத்த
முடிச்சுகள் போல் சிரத்தையாய்த்
தொடுத்து வைத்த நல்ல
பணிகளால் தொட்டிச் செடி
சோலையாகி நிற்கும்
நல்ல நேரமிது.
இப் பசுஞ்சோலையில்
தமிழின்பக் கனிதரும்
நால்வர் தமிழ்க் கலை நிலையத்தின்
கலை விழா நிகழ்வுகளைக் கண்டு
மகிழ்ந்து எமது மாணவர்களின்
முயற்சிகளுக்கு ஆதரவு தருமாறு
உங்களைப் பணிவுடன்
அழைக்கின்றோம்.




**28.03.2026**
சனிக்கிழமை காலை
11.00 மணி முதல்

Cultural event by
Naalvar Tamil
*Academy*
*On Saturday*
*28th March 2026*
*11 am onwards*
*At: Woodbridge High School*
*St.Barnabas Road*
*Woodford Green*
*IG8 7DQ*

***Admission: Free***
அனுமதி இலவசம்

*Lunch & short eats will be on sale.*




Saiva Munnetta Sangam (UK) 2 Salisbury Road, Manor Park E12 6AB. Tel: 020 8514 4732
Registered Charity No: 292085 www.saivamunnettasangam.com Email: smsukinfo@gmail.com

SMSUK
EXAMINATION CENTRE FOR
LANGUAGE RELIGION & FINE ARTS

# *Virtual Saiva Samaya Education*

*For School Children*

சைவ சமய பாட வகுப்பு

இணையவழி சமய வகுப்புகள் இணையமூலம் புதன், ஞாயிற்றுக்கிழமைகளில் இணையமூலம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

புதிய மாணவர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பண்ணிசை / சமய பாட வகுப்புகள் பற்றியும், இணையவழி வகுப்புகளின் அனுமதி பற்றியும் மேலதிக விவரங்களுக்கு இங்கே அழுத்தவும்.

தொடர்புகளுக்கு –
திரு நிரஞ்சன் சோதிரட்ணம்
*+447876404354*

Google Classroom

Google Meet

SMSUK
EXAMINATION CENTRE FOR LANGUAGE RELIGION & FINE ARTS

பரீட்சைப் பிரிவு

# *Examinations*





https://forms.office.com/pages/responsepage.aspx?id=DQSIkWdsW0yxEjajBLZtrQAAAAAAAAAAAAa__UE6PuRUMktHVE1XTkUzQ0FLWFlNMFY2RjVFRFZHUy4u&route=shorturl


திருமதி பேரின்பநாயகி இராஜேஸ்வரன்
பரீட்சைத் துணைச் செயலாளர்

திருமதி சர்மிளா மனோகரன்
பரீட்சைச் செயலாளர்
Mobile: 07400880916

## வெளியீட்டுத்துறை

கலசம் *117* வது இதழ் *14-01-2026* புதன்கிழமை அன்று சைவமுன்னேற்றச் சங்க சிவகாம சுந்தரி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் தைப்பொங்கல் விழாவின்போது வெளியிடப்பட்டது என்பதை மிக மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம். இதழை வாசகர்கள் இணையத்திலும் வாசிக்கலாம்.




கலசம் காலாண்டு சஞ்சிகை தங்கள் இல்லத்திற்கு தவறாமல் வருவதற்கு தங்கள் முழுப் பெயர் ,இல்ல முகவரி தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களை பின்வரும் மின்-அஞ்சல் smsukkalasam@gmail.com எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். தயவு செய்து இதை தங்களுக்கு தபாலில் தவறாமல் அனுப்பி வைப்பதற்கு வருடத்திற்கு பத்து பவுண்கள் £ *10.00* வங்கிப்பணமாற்றம் செய்தால் உதவியாக இருக்கும்.

*Barclays Bank Plc*
*Saiva Munnetta Sangam (UK) Kalasam*
*Sort code : 2 0 - 0 4 - 9 6*
*Account Number : 5 0 3 2 8 3 0 8*
*Reference : Your name with initials*

திருமதி சந்திரமலர் சிவநேசச்செல்வன்
வெளியீட்டுத்துறைத் துணைச் செயலாளர்

Thoranam

Kalasam


திருமதி சுதர்சினி வாகீசன்
வெளியீட்டுத் துறைச் செயலாளர்
Mobile: 07943616964














# Enlightenment Circle (Yoga)

அறிவொளி வளையம்




*Dear Friends,We are extremely pleased to announce that our Yoga classes started on 21/01/2023 at our Yoga hall,*
*2 Salisbury Road,*
*Manorpark*
*E12 6AB.*

*Saturday classes at 8.30 am*
*Further details Contact:Mohan - 07830374780*
*Varni - 0777 1251473*

*Sunday classes at 6.30am*
*Futher details Contact: Satkunaranjan- 07518380345*
*Vigneswaralingam – 07952722594*
*Thank you.*
*Enlightenment Circle*

*Enlightenment Circle (Yoga Team) is launching QP (Quite Powerful) zoom sessions from April 2024, once a month. Join with us to get answers for any type of your day to day life questions as we are aiming to bring appropriate experts from various fields and topics. More details to follow soon.*

திருமதி அமிர்தா தியாகலிங்கம்
யோக நிலையச் செயலாளர்
Mobile: 07950 590735

**யோக நிலையம் செய்து வரும் வெளிநாட்டு சமூகப் பணிகளை கீழே உள்ள இணைப்பில் பார்க்கலாம்.**

***This year, 320,000 people were recorded as homeless in Britain and it is a rise of 13,000, or 4%, on last year's figures, equivalent to 36 new people becoming homeless every day. The number of people permanently living rough on London's streets increased by nearly a quarter in three months and the number of rough sleepers with mental health problems (a particularly vulnerable group) rose almost a third, from 934 to 1,220 people. They need support from us all.***

***Hot nutritious vegetarian meals were sponsored by the Saiva Munnetta Sangam (UK). We are grateful for their thoughtful contribution.***

***Meals have been served to the hungry in Sri Lanka, India, Malaysia, Nepal etc. with your support.***

***We have served meals:***

***During 2017 - over 11,875***

***During 2018 - over 12,250***

***During 2019 - over 13,860***

***During 2020 - over 11,500***

***During 2021 - over 12,295***

***During 2023/2024 - over 11,993***

***We have served over 17,640 meals in Ukraine Poland border to refugees from Ukraine***

**பொருளாதார நெருக்கடியான காலகட்டத்திலும் தொடர்ந்து சேவைகளை வழங்கிவரும் அறிவொளி வளையம்.**

***https://www.kalmunainet.com/archives/79386*** [http://alayadivembuweb.lk/](http://alayadivembuweb.lk/)

VIDYA DHANAM...

Enlightenment Circle

Saiva Munnetta Sangam

# Out Reach Projects - Sri Lanka – Jan'25

## Educational Materials Distributed to the under-privileged children in Vanni

Yoga team has been honored to provide educational materials to the following schools in the Vanni villages who requested this help to the children (approx. 350) in need during the current situation.

| | |
|---|---|
| Mu-Arokkyapurm Tamil vidyalayam | 40 |
| Mu-Iyankankulam Mahavidyalayam | 100 |
| Mu-Puththuuvetuvan G.T.M School | 20 |
| Mu-Amathipuram Tamil Vidyalayam | 50 |
| Mu-Anivilunthan Kulam G.T.M School | 40 |
| Mu-Thiru Muruikandi Hindu Viddiyaliyam | 100 |

## Stage 1

Arokkyapuram Tamil Vidyalayam







Mu-Amathipuram Tamil Vidyalayam











## Stage 2

Mu-Anaivilunthan Kulam G.T.M School











Mu-Thirumurikandy Hindu Viddiyalayam











Our heartiest thanks go to Mr Sivanesan for meticulously coordinating activities from London. Our special thanks to him in getting the items during this difficult situation.


**Our gratitude to the yoga team and well-wishers for their support for all our initiatives.**



**Special thanks go to the following for their kind contribution:**

| | | |
|---|---|---|
| Mrs | V | Amin family |
| Mr | S | Brahatheesan family |
| Mr | G. | Gunasekeram family |
| Mr | R | Karthigan family |
| Mrs | P | Uthamakunan family |

Sincere thanks to the yoga team for their support and thanks to our team for their invaluable help on the ground in successfully carrying out this operation......



# ANNA DANAM

Enlightenment Circle    Saiva Munnetta Sangam

## Out Reach Projects - Sri Lanka – Feb'26

**A special Anna Dhanam (meal) provided to the children at "Organisation for Rehabilitation of the Handicapped" (ORHAN) in Vavuniya during the month of February'2026.**

Special meal provided for 100 mentally challenged children. Our plan is to feed these children with a vegetarian meal every month. Are you interested in supporting this cause?








Sincere thanks to all our well-wishers for their invaluable support.

குடிசெய்வ லென்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான் முந்துறும் - திருக்குறள்

"...remember every morsel of food we eat is linked to every single hungry stomach in the world; whether you like it or not! Therefore, eat well and do something productively to feed the hungry where possible." – Sadhguru Jaggi Vasudev.

Hot nutritious vegetarian meal was sponsored by Mr J Ramanathan. Our sincere thanks.



**Anyone interested in sponsoring a meal for need people, please feel free to contact us.**

Nutritious vegetarian meals have been served to the hungry in Sri Lanka, India, Malaysia, Nepal etc. with your support.

**We have served over 100,000 meals to the people in need since 2017.**



# ANNA DANAM...

Enlightenment Circle    Saiva Munnetta Sangam

## Out Reach Projects - Sri Lanka – Feb'26

**Special Anna Dhanam (food offerings ) provided for the elders at S elva Nagar in Vanni during February'26.**

About 135 elders displaced after the war . This activity was co -ordinated with the help of the Government Agent.



We were the first organisation who recognised these elders situation and provided Anna Dhanam on a **"Hands on Meals"** concept; where a nutritious vegetarian meal is served as an act of Anna Dhanam.


முதியோர் சங்கம்
ELDERS SOCIETY
SELVANAGAR

Elders will be provided with all the provisions for them to take all the initiative to cook a nutritious vegetarian meal, which is combined with the act of Anna Dhanam.

குடிசெய்வ லென்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான் முந்துறும் - திருக்குறள்

**We have served over 100, 000 meals to the people in need since 2017.**

**Sincere thanks to our team for their invaluable support on the ground......**



**This special meal was kindly sponsored by Satash Community Care. Our special thanks for their invaluable contribution in providing a special meal.**



Nutritious vegetarian meals have been served to the hungry in Sri Lanka, India, Malaysia, Nepal etc. with your support.

# ANNA DANAM

SAIVA MUNNETTA SANGAM UNITED KINGDOM

Enlightenment Circle | Saiva Munnetta Sangam

## Out Reach Projects - London – Feb'26

**A special Anna Dhanam (feeding the hungry) in South East London for the month of February'26.**

The data from Government, UK shows that in September 2023, people sleeping rough and seeking help to leave the streets behind, increased to the highest level since 2018 across the country.



Seva Street has provided over 100,000 meals to the people who are homless on a regular basis.



The volunteers of Seva Street cook fresh vegetarian food every Wednesday and distribute at Stratford shopping Centre from 7pm – 9pm.

The number of people sleeping rough in London has increased significantly reaching 11,993 in 2023/2024. Seva street provides essentials every year to survive the winter.



Seva street also provides clothing, beverages, essential toiletries and grooming every Wednesday with the hot meals at the Stratford shopping Centre.



**The Team**

EC is privileged to support Seva Street by sponsoring hot meals once a month. We have witnessed the service provided by Seva Street and are touched by their commitment,dedication and enthusiasm.

**Hot nutritious vegetarian meals were sponsored by the Saiva Munnetta Sangam (UK). We are grateful for their thoughtful contribution.**

**Please join us to help make a difference to those who have been affected by homelessness by sponsoring any number of meals; with the help of volunteers, which costs only 50pence per hot meal.**

**Nutritious vegetarian meals have been served to those in need in countries such as Sri Lanka, India, Malaysia, Nepal etc. This has only been possible with your support.**



# VIDYA DHANAM...

SAIVA MUNNETTA SANGAM UNITED KINGDOM

Enlightenment Circle | Saiva Munnetta Sangam

## Out Reach Projects - Sri Lanka – Feb'26

**Educational Materials Distributed to the under-privileged children in Vanni**

Yoga team has been honored to provide educational materials to the following schools in the Vanni villages who requested this help to the children (approx. 350) in need during the current situation.

| | |
|---|---|
| Mu-Arokkyapurm Tamil vidyalayam | 40 |
| Mu-Iyankankulam Mahavidyalayam | 100 |
| Mu-Puththuuvetuvan G.T.M School | 20 |
| Mu-Amathipuram Tamil Vidyalayam | 50 |
| Mu-Anivilunthan Kulam G.T.M School | 40 |
| Mu-Thiru Muruikandi Hindu Viddiyaliyam | 100 |

**Stage 1**

Arokkyapuram Tamil Vidyalayam





Mu-Amathipuram Tamil Vidyalayam







## Stage 2

Mu-Anaivilunthan Kulam G.T.M School







Our gratitude to the yoga team and well-wishers for their support for all our initiatives.



Mu-Thirumurikandy Hindu Viddiyalayam





Our heartiest thanks go to Mr Sivanesan for meticulously coordinating activities from London.









## Stage 3

Mu-Iyankankulam Mahavidyalayam





Mu-Puththuuvetuvan G.T.M School






Our heartiest thanks go to Mr Sivanesan for meticulously coordinating activities from London. Our special thanks to him in getting the items during this difficult situation.

Our gratitude to the yoga team and well-wishers for their support for all our initiatives.

**Special thanks go to the following for their kind contribution:**

| | | |
|---|---|---|
| **Mrs** | **V** | **Amin family** |
| **Mr** | **S** | **Brahatheesan family** |
| **Mr** | **G.** | **Gunasekeram family** |
| **Mr** | **R** | **Karthigan family** |
| **Mrs** | **P** | **Uthamakunan family** |

Sincere thanks to the yoga team for their support and thanks to our team for their invaluable help on the ground in successfully carrying out this operation……



# Social Service

Naalvar Senior Centre

நால்வர் மூத்தோர் நிலையம்

நால்வர் மூத்தோர் நிலைய உறுப்பினர்களின் ஒன்று கூடுகை வாரம் தோறும் திங்கட் கிழமைகளில் காலை 10:00 மணி தொடக்கம் 14:00 மணி வரை சங்க மண்டபத்தில் நடைபெறுகிறது.

ஒவ்வொரு வாரமும் பல்துறைத் தெர்சியாளர்கள் வருகை தனது சொற்பொழிவுகள், யோகப்பயிற்சிகள், உடல்நல ஆலோசனைகளும் வழங்கி வருகின்றனர். இதனால் மூத்தோர் நிலைய உறுப்பினர்கள் தமது நேரத்தை பயனுள்ள முறையில் கழிப்பதுடன் , மகிழ்ச்சியாகவும் இருக்கின்றனர்.

திரு. சிவாதம்பு

சமூக சேவைச் செயலாளர்

Mobile: 07861393295

# Naalvar Senior Centre

நால்வர் மூத்தோர் நிலையம்

நால்வர் மூத்தோர் நிலைய உறுப்பினர்களின் ஒன்று கூடுகை வாரம் தோறும் திங்கட் கிழமைகளில் காலை 10:00 மணி தொடக்கம் 14:00 மணி வரை சங்க மண்டபத்தில் நடைபெறுகிறது. இந்த நேரத்தில் துறைசார் வல்லுனர்களும், ஆன்மிக சொற்பொழிவாளர்களும் வருகை தந்து; மனநலம், ஆரோக்கிய வாழ்வு, உடல் நலம், யோகப்பயிற்சிகள் பற்றிய விளக்கங்களை வழங்குகின்றனர். இதனால் மூத்தோர் நிலையத்தினர் தமது பொழுதை பயனுள்ள முறையிலும், மகிழ்வாகவும் கழிக்கின்றனர்.

திருமதி இந்திரா குணசிங்கம்


சமூக சேவைத் துணைச் செயலாளர்

Mobile: 07438182841

*02/02/2026* திங்கட்கிழமை அன்று "யோக பயிற்சி பற்றியும் மருத்துவ ஆலோசனைகள் பற்றியும்" வழங்குவதற்காக திருவாளர் *Dr .*நவநீதன் அவர்கள் வருகை தந்திருந்தார்

*09/02/2026* திங்கட்கிழமை அன்று "புலம்பெயர் தமிழர்களும் வரலாறுகளும்" பற்றி உரையாற்றுவதற்கு வோல்த்தம்ஸ்ரோவைச் சேர்ந்த திருவாளர் குகன்- குகனேந்திரன் அவர்கள் வருகை தந்திருந்தார்.

*23/02/2026* திங்கட்கிழமை என்பீல்ட் நாகபூசணி அம்மன்கோயில் பிரதமகுருவான கமலநாத குருக்கள் ஐயா அவர்கள் ஆன்மிக சொற்பொழிவு ஆற்றுவதற்கு வருகை தந்திருந்தார்.







# Overseas Projects

வெளிநாட்டுச் செயல் திட்டங்கள்




வெள்ள அனர்த்த நிவாரணப்பணியில் எம்முடன் இணைய விரும்புவோர் அருகில் இருக்கும் இணைப்பை அழுத்துவதன் மூலம் விவரம் பெறலாம்.

https://www.totalgiving.co.uk/appeal/Sri_Lanka_Flood_Relief_Appeal

திருமதி மாலினி கிரிதரன்

வெளிநாட்டுத் திட்டத் துணைச் செயலாளர்

திரு. சோதிரட்ணம் நிரஞ்சன்

வெளிநாட்டுத் திட்டச் செயலாளர்

Mobile: 07876404354

இலங்கையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பேரிடர் உதவிகள் எமது வெளிநாட்டுத்திட்டத்தின் மூலம் செய்யப்பட்டு வருகின்றன. அந்த வகையில் தற்போது அந்த மக்களுக்குத் தேவையான ஆடைகளும் மலைநாட்டின் பல பகுதிகளுக்கும், கிளிநொச்சிப்பகுதிக்கும் ஒன்பது பெட்டிகளில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதற்காகப் பெரிதும் பாடுபட்ட வெளிநாட்டுத்திட்டத்தினருக்கும், தேவையான ஆடைகளைக் கொடுத்துதவிய அன்பர்களுக்கும் தோரணம் இதழ் சார்பில் நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவிக்கிறோம்.










*2024 ஆம் ஆண்டு சைவ முன்னேற்றச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட ராகசங்கமம் நிகழ்வினை கீழ்வரும் இணைப்புகளை அழுத்துவதன் மூலம் கண்டு களிக்கலாம்.*

ராக சங்கமம் பகுதி - 1


ராக சங்கமம் பகுதி - 2

ராக சங்கமம் பகுதி - 3

ராக சங்கமம் பகுதி - 4

ராக சங்கமம் பகுதி - 5

# யோகர் சுவாமிகள் குருபூசை



யோகர் சுவாமிகள்


யோகர் சுவாமிகளின் குருபூசை வழிபாடுகள், மாதம் தோறும் ஆயிலிய நட்சத்திரத்தன்று எமது ஆலயத்தில் இடம்பெறுகின்றன. சென்ற மாதம் வழிபாடுகள் *02* ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்றன.

இந்த மாதம் *01* ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை *11* மணி முதல் *1* மணிவரை நடைபெறும் என்பதனை அறிவிக்கிறோம்.
ஆயிலிய பூசை பற்றி அறிந்து கொள்ள பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
*+442085144732 / +447930825061 (Whatsapp)*


யோகர் சுவாமிகளின் மாதாந்த கூட்டுப்பிரார்த்தனை, வழிபாடுகளில் பங்குபற்ற விரும்புபவர்கள் தயவுசெய்து திரு. வாமனானந்தன் *(07958142288)*, திருமதி பேபி சரோஜா கனகசபேசன் *(07484829240)*ஆகியோருடன் தொடர்பு கொள்ளவும்.

யோகர் சுவாமிகளின் குருபூசை வழிபாடுகளில் நீங்கள் *Zoom* மூலமும் இணைந்து கொள்ளலாம்.
*Zoom ID: 2342346060*
*Pass code: smsuk*

**யோகர் சுவாமிகள் பற்றிய விவரணக் காணொளி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.**




விபரணக் காணொளி



நற்சிந்தனை



கதா காலட்சேபம்



பாடல்

# Membership

## சங்க அங்கத்துவம்

சைவ முன்னேற்றச் சங்கத்தில் புதிய அங்கத்தவர்கள் வரவேற்கப்படுகிறார்கள். எமது சங்கத்துடன் அங்கத்தவராக இணைந்து சேவை செய்ய விரும்புபவர்கள் கீழ் உள்ள இணைப்பில் இருக்கும் அங்கத்துவ படிவத்தை நிரப்பி எமது அங்கத்துவச் செயலாளரிடம் சமர்ப்பிக்கவும். அல்லது அங்கத்துவச் செயலாளருடன் தொடர்புகொண்டு அங்கத்துவப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.




திரு. சுப்பிரமணியம் இரத்தினராசா

அங்கத்துவத் துணைச் செயலாளர>

திருமதி பத்மா குணதாசன்

அங்கத்துவச் செயலாளர்

Mobile: 07904022821

# Building

கட்டடச் செயல் பிரிவு

எமது சங்கக் கட்டடம் இந்நாட்டின் அரசாங்க விதிகளுக்கமைய ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

திரு. கு. பரமேஸ்வரன்

கட்டடத் துணைச் செயலாளர்

திரு. மாணிக்கவாசகர் ஜெயக்குமார்

கட்டடச் செயலாளர்

Mobile: 07711334455

# அந்திமக் கிரியைகள்



சமூக சேவை

***சைவ முன்னேற்றச் சங்கத்தால் அந்திமக் கிரியைகள் செய்வதற்கான சைவக் குருக்கள், கிரியை வசதிகள் ஆகியன செய்து தரப்படும். அந்திமக் கிரியைகள் செய்வதற்காக சிவஸ்ரீ சாமிநாதக் குருக்கள் சோமசுந்தரக்குருக்கள் வருகை தந்துள்ளார். அந்திமக் கிரியைகளுக்கான விவரங்களுக்கு சைவ முன்னேற்றச் சங்க பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் +442085144732 / +447930825055 (Whatsapp) தொடர்பு கொள்ளவும்.***


சிவஸ்ரீ சாமிநாதக் குருக்கள்
சோமசுந்தரக் குருக்கள்
**சைவக் குருக்கள்**

07483877902

Reg Charity 292085

# *Saiva Munnetta Sangam Website*

*Find out more from our website*

*Saiva Munnetta Sangam.com*

*Find  Directions*

Reg Charity 292085

# திருக்கணித பஞ்சாங்கக் கலண்டர் 2026

Saiva Munnetta Sangam UK


திருக்கணித பஞ்சாங்கக்
கலண்டர் 2026



இங்கிலாந்து நேரப்படி
கணிப்பிடப்பட்டது

CLICK HERE

**சைவ முன்னேற்றச் சங்கத்தின் விசேட நிகழ்வுகளைக் குறிக்குமுகமாகவும் சைவ சமயப் பண்டிகைகளை அறிவிக்குமுகமாகவும் இங்கிலாந்து நேரப்படி கணிப்பிடப்பட்ட திருக்கணித பஞ்சாங்கக் கலண்டர் இந்தப் பக்கத்தில் காணலாம். அத்துடன் இங்கிலாந்தின் ஏனைய ஆலய பொது அறிவித்தல்களும் இங்கு இணைக்கப்பட்டுள்ளன.**



# MONTHLY EVENTS CALENDAR

## Saiva Munnetta Sangam (UK)

*MARCH 2026*

| Su | | | M | Tu | W | | Th | F | Sa |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Zoom ID : 2342346060 | Password: smsuk | | | |
| 1 (9.30-13h) Tamil School At Little Ilford School | (12:30-13:30) Children Pannisai Class | (06:30-8h) Yoga Class At Sangam | 2(10-14h) Moothor Ondru koodal at Sangam | 3(18.15 – 20.00) Children's Tamil reading class | 4(18:00-19:00) Children Zoom Saiva Class | (20.00-21.00) Adult zoom Samaya class | 5 (19:00-20h) Children's Bajanai | 6 | 7 (08:30-10h ) Yoga Class At Sangam |
| 8 (9.30-13h) Tamil School At Little Ilford School | (12:30-13:30) Children Pannisai Class | (06:30-8h) Yoga Class At Sangam | 9(10-14h) Moothor Ondru koodal at Sangam | 10 (18.15 – 20.00) Children's Tamil reading class | 11 (18:00-19:00) Children Zoom Saiva Class | (20.00-21.00) Adult zoom Samaya class | 12 (19:00-20h) Children's Bajanai | 13 | 14(08:30-10h ) Yoga Class At Sangam |
| 15 (9.30-13h) Tamil School At Little Ilford School | (12:30-13:30) Children Pannisai Class | (06:30-8h) Yoga Class At Sangam | 16(10-14h) Moothor Ondru koodal at Sangam | 17 (18.15 – 20.00) Children's Tamil reading class | 18(18:00-19:00) Children Zoom Saiva Class | (20.00-21.00) Adult zoom Samaya class | 19 (19:00-20h) Children's Bajanai | 20 | 21 (08:30-10h ) Yoga Class At Sangam |
| 22 (9.30-13h) Tamil School At Little Ilford School | (12:30-13:30) Children Pannisai Class | (06:30-8h) Yoga Class At Sangam | 23 (10-14h) Moothor Ondru koodal at Sangam | 24 (18.15 – 20.00) Children's Tamil reading class | 25(18:00-19:00) Children Zoom Saiva Class | (20.00-21.00) Adult zoom Samaya class | 26 (19:00-20h) Children's Bajanai | 27 | 28 (08:30-10h ) Yoga Class At Sangam |
| 29 | (12:30-13:30) Children Pannisai Class | (06:30-8h) Yoga Class At Sangam | 30 (10-14h) Moothor Ondru koodal at Sangam | 31 (18.15 – 20.00) Children's Tamil reading class | | | | | |

# Saiva Munnetta Sangam (UK)

## Finearts & Further Studies

Reg Charity 292085

| Studies | Teachers | Contact No |
|---|---|---|
| ▪ *Vocal & Violin* | *Mrs. Sukirthakala Kadatcham* | 0790 388 9839 |
| ▪ *Mirthangam* | *Mr. Kumaran Ravindradas* | 0792 181 0386 |
| ▪ *Veena* | *Mrs. Senthilchelvy Vamananathan* | 0788 659 1710 |
| ▪ *Dance* | *Mrs. Raji Mohanaraj* | 0794 976 3821 |
| ▪ *Saiva Siththantha Rathina Centre, Europe* | *Mr. J. Fatimaharan* | 0787 730 2731 |
| ▪ *Saivap Pulavar Course* | *Mr. J. Fatimaharan* | 0787 730 2731 |
| ▪ *Saivism Thirumurai, Pannisai* | *Contact: Mr. S Niranjan* | 0787 640 4354 |

# Saiva Munnetta Sangam UK

*Reg Charity 292085*

| | |
|---|---|
| Phone | *0208 514 4732* |
| WhatsApp | *+447930825061* |
| Address | *2 Salisbury Road, Manor Park, London, E12 6AB, UK. (Click icon for map)* |
| Website | *www.saivamunnettasangam.com* |
| Email | *smsukinfo@gmail.com* |
| YouTube | *Saiva Munnetta Sangam UK* |
| WhatsApp | *Join the SMSUK Whatsapp Group* |

**Lloyds Bank**

**309080**
**00373079**

To Donate
click here

DONATE
TOTAL GIVING
THE DIRECT WAY TO DONATE

**SMSUK QR CODE**